## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.173/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உலகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏகாம்பர முதலி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.09.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 6ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 22.08.1966ம் தேதியிட்டு நடேச முதலியார் வகையறா ஏழுமலை முதலியாருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 28.10.1992ம் தேதியிட்டு ஏழுமலை முதலியார் வகையறா ரங்கா ரெட்டிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 15.12.1999ம் தேதியிட்டு சுப்பிரமணிய ரெட்டி வகையறா என் அப்பா ஏகாம்பர முதலிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

பட்டா எண்.1568ல் ஏகாம்பர முதலி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.646ல் ஏகாம்பர முதலி பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 04.12.2012ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)